செய்தி வெளியீடு எண்:167 நாள் : 22.03.2016

<u>**தமிழ்நாட்டில் தேர்தல் விதிமுறை அமலானதிலிருந்து, ரூ.11.60 கோடியை பறக்கும்படை மற்றும் கண்காணிப்புக் குழுவினர் கைப்பற்றினர். காவல் துறையினரால் ரூ.33,19 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**</u>

***********

தேர்தல் விதிமுறைகளை மீறி, உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம், சில்வர் குடங்கள், அரிசி மூட்டைகள், கேஸ் ஸ்டவ் போன்றவையும் உரிய அனுமதி ஏதும் இல்லாமல் லாரியில் ஏற்றிச் சென்ற ஏரி மண், கேரம்போர்டு, கிரிக்கெட் பேட் போன்ற விளையாட்டுப் பொருட்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை, விருதுநகர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டினம், கோயமுத்தூர், மதுரை, நெல்லை, கடலூர், திண்டுக்கல், நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 19.03.16 அன்று மொத்தம் ரூ.48,25,730/– பறிமுதல் செய்யப்பட்டது. 20.03.16 வரை பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்ட தொகை ரூ.5,17,21,557/– ஆகும்,

நிலையான கண்காணிப்புக்குழுவினர் (SST) ஆய்வின்போது 19.03.16 அன்று ரூ.28,24,500/– ம், 20.03.16 அன்று ரூ. 8,68,600/–ம் பறிமுதல் செய்யப்பட்டது. 20.03.16 வரை மொத்தம் ரூ.6,43,23,653/– கைப்பற்றப்பட்டு சார்–கருவூலங்களில் செலுத்தப்பட்டுள்ளன. உரிய விசாரணைக்குப்பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன. இக்குழுவின் சோதனையின் போது, அனுமதியின்றி எடுத்துச்சென்ற சிகரெட் பண்டல், வேட்டி, சேலை, பித்தளை குடங்கள், அலுமினியம் பார்கள், மதுவகைகள் போன்றவை சிக்கியது. இதுவரை 11 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நன்னடத்தை விதி அமலானதில் இருந்து 20.3.16 வரை பறக்கும் படையினரால் ரூ.5,17,21,557/– யும், நிலையான கண்காணிப்புக்குழுவினரால் ரூ.6,43,23,653/– உட்பட மொத்தம் ரூ.11,60,45,210/– பறிமுதல் செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேர்தல் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக்குழு தவிர காவல் துறையினரால் இதுவரை ரூ.33,18,872/– ரொக்கமும், 6,57,665 மி.லி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளும் கைப்பற்றப்பட்டன.

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9